www.tamilarangam.net

அறிவோர் பக்கம்

ஆண்டு 08 சித்திரை 2004 இதழ் 03

# பிள்ளையார் சுழி

இந்துக்கள் எதை எழுத ஆரம்பித்தாலும் அல்லது எந்தச் செயலை செய்ய ஆரம்பித்தாலும் முதலில் போடுவது பிள்ளையார் சுழி அல்லது பிள்ளையார் வணக்கமே. சாதாரண கடிதம் முதல் பெரிய காவியம் முதல் பிள்ளையார் சுழி(உ) போட்டு விட்டுத்தான் எழுத ஆரம்பிப்பார்கள். பிள்ளையார் சுழி என்பது உயிர் எழுத்தின் "உ" என்பதல்ல. வட்டமும் நேர்கோடும் சேர்ந்ததே பிள்ளையார் சுழி. வளைசலான கொம்போடு ஆரம்பிக்கும் பிள்ளையார் சுழி வளையாத நேரான கோட்டில் முடிவதாகும்.

உலக தோற்றத்தின் ஆரம்பமானது ஒலி, ஒளி என்பதே விஞ்ஞானத்தின் விளக்கமாகும். இவையிரண்டும் இல்லாது பின் தோன்றிய உயிர்கள் தோன்றியிருக்க முடியாது. பிள்ளையார் சுழியானது இப் பிரபஞ்சத்தின் சிருஷ்டியைக் குறிப்பதாகும். பிள்ளையார் சுழியின் வட்டமானது ஒளியையும் நேர்கோடானது ஒலியையும் குறிப்பதாகும். பௌதிகவியலில் ஒளியானது நேர் அலையாகவும் ஒலியானது குறுக்கு அலையாகவும் செல்வதாக கூறப்படுகின்றது.

கத்தோலிக்க மதத்தவர்களின் புனித நூலான பரிசுத்த வேதாகமம் முதலாவது அதிகாரத்தில் பூமியில் தேவன் முதலில் வெளிச்சத்தை உண்டாக்கினார் எனக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு உலகின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்து மதங்களும் இறைவன் ஒளிவடிவானவர் என்றே கூறுகின்றன.

இந்துக்கள் தைப்பொங்கல் பண்டிகையிலும் சித்திரைப் புத்தாண்டின் போதும் தங்கள் முதல் வணக்கத்தை உலகினிற்கு ஒளி தரும் சூரியனுக்கே செலுத்துகின்றனர். உலகின் சிருஷ்டிக்கு ஒளி முதன்மையானது என்பதனை விஞ்ஞானம் என்பது என்னவென்று தெரியாத காலத்தில், மெஞ்ஞானத்தின் மூலம் உணர்ந்து சூரியனை வழிபட்டுள்ளனர். தாம் செய்கின்ற அனைத்துச் செயல்களுக்கும் பிள்ளையார்சுழி போட்டுவிட்டுத்தான் அதனை ஆரம்பித்துள்ளார்கள். எழுத ஆரம்பிக்கும்போதும்கூட முதலில் போடுவது பிள்ளையார்சுழியே. இவ் உலக வாழ்க்கைக்கு ஒளியும், ஒலியும் அவசியமானது என்றறிந்து பிள்ளையார்சுழி மூலம் அதனை வெளிப்படுத்தி வந்துள்ளனர். உலகின் அனைத்துச் செயற்பாடுகளும் ஒளி, ஒலி ஆகியவற்றின் மறு வடிவங்களாகவே அமைந்துள்ளன. அதாவது ஒளி, ஒலி அலைகளே. உலகின் சிருஷ்டியைக் குறிக்கும் பிள்ளையார்சுழியினை முடிந்தவரை நாமும் ஆராய்வோம்.

(இது பற்றிய விளக்கங்களை எழுதுங்கள்)

# அறம்

அறம் என்பது தமிழிலே மிகவுயர்ந்த சொல்லாகவுள்ளது. அறத்தைப் பற்றி தமிழறிஞர்கள் பலரும் பலவிதமாகக் கூறினாலும், திருவள்ளுவர் அறத்தை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார். அறமே இறைவன் என்று கூறுகின்றார். அறத்துப்பால் கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தில்

**அறஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் பிறஆழி நீந்தல் அரிது.** (குறள் 8)

என்ற குறள் மூலம் தெளிவாகக் கூறியுள்ளார்.

தமிழ் மூதாட்டி ஒள்வையார், ஆத்திசூடியில், **அறம் செய விரும்பு** எனக் கூறுகின்றார். இதில் அறம் என்பது தர்மம் (வடமொழிச்சொல்) என்றே பலரும் கருதுகின்றனர். அறம் செய் எனக் கூறாமல், அறம் செய விரும்பு எனக் கூறும்போது தர்மத்தை செய்ய விரும்பு என்ற பொருளில் சிந்திக்க முடியாது.

மணிமேகலைச் செய்யுளில் **அறம் எனப்படுவது கேட்பின் மறவாது இதுகேள்! மன்னுயிர்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் கண்டது இல்.** எனக் கூறுகின்றது. அதாவது உணவு இல்லாதவனுக்கு உணவும் ஆடை இல்லாதவனுக்கு ஆடையும் கொடுப்பது அறம் எனப் படுகிறது. இல்லாதவர்க்கு ஒன்றைத் தருவது அறம் எனப்படுகிறது.

ஆனால் அறம் என்ற சொல்லுக்கு திருவள்ளுவர் கூறுகின்ற விளக்க மானது வித்தியாசமானதாகவே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கின்றது. அவர் கூறுவது யாதெனில் இன்சொல் பேசுவது அறம். இன்சொல் பேசாவிட்டாலும் பாதகமில்லை இன்னாச்சொல் பேசாமல் இருப்பது அறம். அழுக்காறு கொள்ளாதிருத்தல் அறம். பிறருடைய பொருள்மேல் அவாவின்றி இருத்தல் அறம். வெகுளாதிருத்தல் அறம். பொய் கூறாதிருத்தல் அறம். உண்மை பேசுவது அறம். என்றெல்லாம் கூறுகின்றார். அவருடைய விளக்கத் தின்படி தீயனவற்றை நீக்குதலே அறம் எனப் பொருள்படுகின்றது. அதாவது பிறர் நாணத்தக்க செயல்களைச் செய்யாது வாழ்தலே அறவழியில் வாழும் வாழ்க்கை எனக் கூறுகின்றார்.

அறம் என்பது தர்மம் எனக் கருதினால், தர்மம் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகின்றது. **அந்தணர் என்போர் அறவோர்** என்ற சொற்றொடரைப் பார்க்கின், அந்தணர் அனைவரும் தானம் செய்பவர்கள் எனக் கருதவேண்டும்.

திருவள்ளுவர் கூறும் அறத்தைச் செய்வதற்குப் பொருள் தேவையில்லை. மனதினில் மாசு இல்லாது இருத்தலே அறம் எனத் தெளிவாகக் கூறுகின்றார். அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மனமே காரணம் என்கிறார். மனத் தூய்மையுடன் வாழும் போது போரும் இல்லை. பூசலும் இல்லை. இவ் உலகில் எத்தனையோ மாசுக்கள். இவற்றிற்கு மனம் உட்படாமல், அதனைக் காத்து வாழ்வதே சிறந்த அறவாழ்க்கை என்று கூறுகின்றார்.

இதனையே ஔவையாரும் அறம் செய விரும்பு எனக் கூறியுள்ளார். பொருளற்றவர்களும் அறம் செய்ய முடியும் என்பதனை திருவள்ளுவர்

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**

என்ற குறள்மூலம் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார்.

பொருள் இல்லாதுவிட்டாலும் அறம் செய விரும்புவோம்.

# மெய்யறிவு

மெய்யறிவு என்பது மனவுணர்வெனும் பகுத்தறிவேயாகும். இந்த அறிவு இல்லாது வாழ்பவன் மக்கட் பிறவி எனக் கூறலாகாது. ஐந்தறிவு கொண்ட விலங்குகளுக்கும் மெய்யறிவு இல்லாத ஒருவனுக்கும் வித்தியாசம் எதுவுமில்லையே. விலங்கு உண்கிறது, உறங்குகிறது, குட்டி போடுகிறது. அதேபோல் இவனும் உண்கிறான், உறங்குகிறான், பிள்ளை பெறுகிறான். விலங்கானது தன் பொருட்டுப் பிறரை வருத்த எண்ணுகிறது. செய்கின்றது. இவனும் அவ்வாறே செய்ய எண்ணுகிறான். செய்கிறான்.

உண்மையும் நேர்மையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பவனிடத்தில் மெய்யறிவு இருப்பது தெரியும். மற்றவர்களிடம் மெய்யறிவு இயல்பாக அமைந் திருந்தாலும், அந்த மெய்யறிவானது பொய், பொறாமை, அவா, வெகுளி போன்றவற்றால் மூடப்பட்டிருக்கும். உண்மையால் அவைகளைக் களைந்ததும் அவர்களிடமிருந்து மெய்யறிவு ஒளிரும்.

மனித உடலை எடுத்து பின் விலங்கு வாழ்வு நடாத்துவதைவிட இழிவு வேறில்லை. ஆறு அறிவு கொண்ட மனிதன் விலங்கினுடைய வாழ்வை நடாத்துவதால்தான் உலகில் போராட்டங்கள் நிகழ்கின்றன. போராட்டங்களில்தான் எத்தனைவிதம்!. தனக்குள்ள பசி பிறர்க்கும் உண்டு என்று எண்ணி வாழ்வு நடாத்தினால் போதுமே. அவ்வெண்ணமுடையோன் தன் என்பையும் பிறர்க்கு உதவ விரும்புவான். இந்த ஒப்புரவு நெஞ்சமின்மை காரணமாக உலகம் என்ன பாடுபடுகிறது. ஒருவன் மற்றவனை வருத்துவதற்கும், ஒரு நாட்டார் இன்னோர் நாட்டைப் பற்றுவதும் எதற்கு?. தன்னல வாழ் விற்கே.

ஆறாவது அறிவான மெய்யறிவு ஒருவனிடமிருந்து வெளிப்படும் போது, அந்த தன்னலப்பேய் இல்லாது ஒழியும். அந்தப் பேயினை விரட்ட ஒவ்வொரு மனிதனும் முயலவேண்டும். இப் பிரபஞ்சத்தில் பல தெய்வ மக்கள் தோன்றிப் பல நூல்களை அருளிச் செய்ததின் நோக்கம் என்ன?. மக்கள் அனைவரினதும் மெய்யறிவு எனும் மனவுணர்வை வெளிப்படுத்தவே. அதற்காகப் பாடுபட்டவர்கள் எத்தனை பேர்?.

இந்தப் பகுத்தறிவால் விளையும் நன்மைகள் பல. அந்த அறிவால் மனிதன் தெய்வமாகிறான் என்று கூடச் சொல்லலாம். தெய்வம் என்பது என்ன?. அன்பேயாகும். அன்பே சிவம் எனவும், Love is God என்று கூறுவதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். மெய்யறிவு உடையவன் உள்ளத்தில் அன்பு தானாகவே பிறக்கும். மனவுணர்வெனும் மெய்யறிவு உடையவன் தன்னுயிர் போல் மன்னுயிரையும் கருதுவான். பிறர் துன்பம் கண்டு அதைத் தீர்க்க முற்படுவான். அத்துடன் வேறுபல நல்லியல்புகளையும் அவ்வறிவு நல்குகிறது. இந்த மெய்யறிவு உடையவர்கள் வாழும் உலகினிற்கு அரசு தேவையில்லை. காவற்படை தேவையில்லை. சட்டம் தேவையில்லை. காரணம் அவர்கள் மனமே எல்லாம். அதுவே அரசு. அதுவே சட்டம். ஒருமுறை மறவினையாற்றி, அதன் பயனாகத் தனக்குத் தானே வருந்தும் ஒருவன் மறு முறை அவ்வினையாற்ற ஒருப்படுவனா?. அப்படிச் செய்ய முற்படும்போது மெய்யறிவு அதனைத் தடுக்கும். மெய்யறிவு உடையவன் தவறு செய்தாலும் அதனை மறைக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயலமாட்டான். அதனை வெளியிடவும், அது குறித்து வருந்தவுமே முயல்வான்.

மெய்யறிவு உடையவன் தனக்கு தீங்கு செய்தவனைக்கூட கடிய முயல மாட்டான். மெய்யறிவானது ஒருவனை சீற்ற முறாதவாறு காக்கும். மாற்றான் மீது இரங்குமாறும் செய்யும். மறந்தும் பிறருக்கு கேடு மனத்தாலும், மொழியாலும், செயலாலும் நிகழ்த்தாதவாறு காத்து வருவது மெய்யறிவே. மெய்யறிவு உடையவன் பிறர் தவறு செய்யும் போது அவரைக் கடியாது திருத்த, தன்னையே வருத்துவான்.

இம் மெய்யறிவு பெற மனிதன் அவா அறுத்தல் வேண்டும். உண்மையோடும் நேர்மையோடும் வாழ்க்கை நடாத்தும் ஒருவன் மெய்யறிவு பெறலாம். எல்லோரும் மெய்யறிவு பெற்றால் உலகினில் அமைதி நிலவும். நாமும் முயற்சிப்போம்.

(மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் எனும் நூலிலிருந்து)

# சிந்திப்பதற்கு, சில வரிகள்.

T.யோகமனோகரி

வாழ்க்கையில் வெற்றியினைக் காணமுடியாத சில மனிதர்கள் தங்களின் நிலமைக்கு அதிஷ்டம் இன்மையே காரணம் என்று தமக்குத் தாமே சமாதானம் சொல்லிக் கொள்வர். இது அவர்களின் அறியாமையே. அதிஷ்டம், துரதிஷ்டம் என்று எதுவுமேயில்லை. ஒரு மனிதனுடைய வாழ்க்கை என்பது, அவனிலேயே தங்கியுள்ளது. அவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியிலேயே அடங்கியிருக்கின்றது. ஒரு மனிதனின் அதிஷ்டம் என்பது அவனேதான் என புகழ்மிக்க தத்துவ மேதை **எமர்சனின்** கருத்து.

**தன்கையே தனக்கு உதவி,**

Self help is the best help போன்ற பொன்மொழிகளும்

Every man his own architect, அதாவது, தன் வாழ்க்கையை உருவாக்கும் சிற்பி தானே என்ற பெரியோர்களின் அமுதமொழிகளும் இதனை உறுதி செய்கின்றன. **சாமுவேல் ஸ்மைலஸ்** என்ற அறிஞர் Self Help என்ற நூலில் தன் நிலைக்குத் தானே காரணம் என்று கூறியுள்ளார். **முயற்சியுடையோர் இகழ்ச்சியடையமாட்டார்** என்ற பழமொழியையும் சிந்தித்துப் பார்க்கலாம்.

செய்யும் செயலை, **செய்வன திருந்தச் செய்** என்ற முதுமொழிக் கேற்ப செவ்வனே செய்யவேண்டும். ஒரு மனிதனுடைய மதிப்பு, அவன் எந்தவொரு சிறிய பணியையும் எவ்வளவு கவனத்தோடு செய்கிறான் என்பதனைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு பணியைச் செவ்வனே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்வதற்கு, அந்தப் பணியில் எமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். அத்தோடு அந்தப் பணியை நன்றாகச் செய்யவேண்டும் என்ற ஆர்வமும் இருக்கவேண்டும். அந்தச் செயலில் அடங்கிய ஒவ்வொரு பகுதிகளையும் சலிப் பின்றி அக்கறையோடு செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் நாம் வாழ்வில் முன்னேறமுடியும். துரதிஷ்டம் என்ற சொல்லை விரட்டியடிக்க முடியும். இதனால் அதிஷ்டம் என்றுமே எமது பக்கமிருக்கும். முயற்சியுங்கள், முன்னேறலாம்.

# துக்கத்தில் சந்தோஷம்

சுகி.சிவம்

சிலருக்குப் பிறரைக் கேலிசெய்து வருந்த வைப்பது மகிழ்வைக் கொடுக்கும். அந்த நேரத்தில் மனம் சோர்ந்துபோவது அறிவுடமை ஆகுமா?.

ஒரு மாலை நேரத்தில் ஒருவர் தனது நாயுடன் வீதியில் உலாவிக்கொண்டிருந்தார். இதனைப் பார்த்த ஒருவர், "என்ன நாயோடு வோக்கிங் போல" எனக் கிண்டல் பண்ணினார். நாயோடு போனவர் முறைத்துப் பார்த்துவிட்டு நடந்தார். "உங்களைக் கேட்கவில்லை. நாயைக் கேட்டேன்" என மேலும் சொன்னான் மற்றவன். இதனைக் கேட்டவர் "இனம் இனத்தோட பேசுது. நமக்கு எங்கே புரியுது?." எனப் பதில் கூறினார்.

இப்படி உடனடியாக பிறரை அவமானப்படுத்துங்கள் என்று கூறுவதல்ல என் நோக்கம். உள்ளீடு அற்ற பிறர் சொற்களை உங்களுக் கானது என வாங்கி, உங்கள் மனதில் சேர்த்து வைக்காதீர்கள். பிறரது இழி சொற்களைக் கேட்டு அழுதுபுலம்புவது தவறு. அத்தோடு கத்தியைத் தூக்கிக்கொண்டு அலைவது அதைவிடத் தவறு. அதனை அலட்சியப்படுத்துங்கள். இதுவே என் ஆலோசனை. நாம் மணல் குன்றுகளாக இருந்தால் காற்று நம்மை அச்சுறுத்தும். பெரும் மலையாக இருப்பின் எந்தக் காற்றும் நம்மை அசைத்துவிட முடியாது.

**உனக்குப் புண் இல்லாத பட்சத்தில் உன்மீது ஒருவன் உப்பைக் கொட்டினாலும் உனக்கு எரியாது** என்ற பழமொழியில் எவ்வளவு உண்மையுள்ளது என்பதனைச் சிந்தித்துப்பாருங்கள்.

கோபத்திலும் காமத்திலும் சொல்லப்படும் சொற்கள் உள்ளீடு அற்ற உளறல்கள். இத்தகைய இழி சொற்களை அலட்சியப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தப் பழகிக்கொண்டால் நாம் ஆனந்தமாக வாழலாம்.

ஒரு ஞானியைத் தரிசிப்பதற்காகக் பலர் கையில் பூக்கள், இனிப்புவகைகளுடன் காத்திருந்தனர். அதேசமயம் ஒரு மூர்க்கன் கையில் கற்களுடன், அவரைத் தூற்றியபடி நின்றுகொண்டிருந்தான். அங்கே வந்த அருளாளர், அனைவரையும் பார்த்து புன்முறுவல் செய்து, இங்கு யார்யார் எதை எதைக் கொண்டுவந்தீர்களோ, அவரவர்கள் அதை அதைக் கொண்டு செல்லுங்கள். இங்கு எதுவும் என்னுடையது அல்ல என்றார். இப்படி வாழப் பழகினால் நன்மையே. நல்லதைச் சுமப்பவர்கள் நல்லதையே பெறுவார்கள். கெட்டதைச் சுமப்பவர்கள் கெட்டதை பெறுவது உலகின் நியதி. பிறருடையதை நம்முடையதாகக் கருதி நாம் ஏன் சுமக்கவேண்டும். வாழ்வில் சொந்தம் கொண்டாடத் தெரிந்து கொண்டால் மட்டும்போதாது. சில சமயம் விலகி நிற்கும் விவேகமும் வேண்டும். நமக்குச் சாதகமாக இல்லாத இயல்பான நிகழ்வுகள், காயப்படுத்தக்கூடிய பிறரது சொல், பிறரது செயல்கள் நம்மை ஏன்-பாதிக்கவேண்டும்.

தன்னைத்தானே துயரப் படுத்திக்கொண்டு வாழ்வது நல்லதல்ல. அதேநேரம் பிறரையும் துயரப் படுத்துவது சரியான வாழ்வியல் இல்லை. சிலருக்கு துயரமாக இருப்பதில் சந்தோஷம். கடவுளின் பெயரால் பட்டினி கிடப்பார்கள். இது தவறு அல்ல. ஆனால், சாப்பிடுகிற மற்ற மனிதரைச் சபித்துக்கொண்டே இருப்பார்கள். தாம் விரதம் இருப்பதாலேயே மற்றவரும் அதனைப் பின் பற்றவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். பின்பற்றாமை தமக்குத் துயரம் தருவதாகப் பிரகடனப்படுத்துவார்கள்.

வாழ்வில் ஆனந்தக் கண்ணீர் வந்தால் சந்தோஷப்படலாம். கண்ணீரில்தான் ஆனந்தம் என்றால் என்ன செய்ய முடியும்.

## நெப்போலியன் பொனபாட்-Napoléon Bonaparte

நெப்போலியன் பொனபாட் பிரான்சின் கோர்ஸ்(Corse) தீவில் அஜக்சியோ (Ajaccio) என்ற பட்டிணத்தில் 1769 ல் பிறந்தார். நெப்போலியன் முதலில் பீரங்கிப்படையின் அலுவலராகச் சேர்ந்தார். 1793இல் அந்தப் படையின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் தனது 24 வயதில் தளபதியானார். தனது 30வது வயதில் பிரான்சின் அதிபரானார். அப்போது குடியரசு ஆட்சி முறையிலிருந்து சாம்ராஜ்ய ஆட்சி முறைக்கு பிரான்ஸ் மாற்றப்பட்டது. அத்துடன் consulat எனும் ஆட்சி முறையை நிறுவி, நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டினார். இவர் தனது 37வது


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வயதில்; 1800இல் ஜேர்மனி அரசுடனான போரில் வெற்றியடைந்தார். தொடர்ந்து 1801இல் ஆஸ்திரியாவுடான போரிலும் 1802இல் இங்கிலாந்துடனான போரிலும் வெற்றி கண்டார். அதனைத் தொடர்ந்து 1804 ஆம் ஆண்டு சக்கரவர்த்தியாகி முதலாவது நெப்போலியன் எனும் பெயரைப் பெற்றுக்கொண்டார். இவரின் ஆட்சிக் காலத்தில் பிரான்ஸ் முழுவதும் ஒரே மாதிரியான நிர்வாக முறையில் கையாளப்பட்டது. Le préfet மூலம் 83 நிர்வாகப் பிரிவுகள் நிர்வாகிக்கப்பட்டன.

நாட்டு மக்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க வாக்கெடுப்பு முறை ஆரம்பிக்கப்பட்டது. இக்காலத்தில் சுதந்திரம், சமத்துவம், சொத்துரிமை போன்றன பிரஞ்சு மக்களின் கோட்பாடுகளாகின. இந்நாளில் LA MARSEILLAISE எனும் பாடல் தேசியகீதமானது. இதனை தளபதியாக இருந்த Rouget de Liste என்பவர் இயற்றினார்.

நெப்போலியன் 1810இல் திருமணம் செய்தார். இவரின் மனைவி ஆஸ்திரியப் பேரரசரின் மகளான மேரி லூயிஸ் ஆவார். திருமணத்தின் பின் அதிகாரம்மிக்க ஏகாதிபதியானார். 1811இல ஐரோப்பா கண்டத்தின் சக்கரவர்த்தியாகக் கணிக்கப்பட்டிருந்தார். ஆனாலும் இங்கிலாந்தை வெல்ல முடியவில்லை.

ஸ்பெயினுடனான போரில் 300000 வீரர்கள் உயிரிழந்தனர். ருஷ்சியாவிற்கெதிராக 1812இல் படையெடுத்த போது பெரிய இழப்பும் பின்வாங்கலும் ஏற்பட்டது. 1813இல் ஆங்கில, ரஷ்சிய, ஆஸ்திரிய கூட்டுப்படையினரால் Leipzig இல் தோற்கடிக்கப்பட்டார். இக் கூட்டுப்படை 1814இல் பாரீசைக் கைப்பற்றினர். நெப்போலியன் Elbe எனும் தீவிற்குத் தப்பி ஓடினார். பின் திரும்பிவந்து 100 நாள் அரசாங்கம் நடாத்தினார். இவர் நாட்டில் இல்லாத காலத்தில் எட்டாம் லூயி ஆட்சி நடாத்தினார். எதிர்ப்படையின் தாக்குதலால் 1815 ஆம் ஆண்டு ஆனி மாதம் Waterloo இல் தோற்கடிக்கப்பட்டு Saint-Hélène இல் சிறை வைக்கப்பட்டு 1821 இல் இறந்தார். பின் 1844 இல் இவரின் சாம்பல் பிரான்சுக்குக் கொண்டுவரப்பட்டு 1853 இல் இருந்து ஒரு பேழையில் வைத்து nvalides எனும் இடத்தில் காக்கப்பட்டுவரப்படுகிறது. இவர் காதலிலும் ஈடுபாடுடையவர். இவர் தன் காதலி Joséphine க்கு எழுதிய காதல் கடிதங்களில் ஒன்று மொழி இலக்கியமாக உள்ளது.

(நன்றி s.எச்சிதானந்தம்)

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.

தொடர்புகளுக்கு: N.Varatharajah, 132 Rue des Fourches, 45500 Gien, FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்